**12. அசன் கதை**

அசன் என்பவன் கதிரவன் குலத்தில் தோன்றியவன். இரகு என்பவனுக்கு மகன். தசரத மன்னனுக்குத் தந்தை. செம்மையுந் திண்மையுஞ் சேரப் பெற்றவன். எதற்கும் அஞ்சா நெஞ்சினன். இவன் விதர்ப்ப நாட்டு வேந்தன் மகளாகிய இந்துமதியின் சுயம்வரத்திற்குச் சென்றான்- அங்கு அரசர்கள் பலர் கூடியிருந்தார்கள். இவன் அழகும் ஆண்மையும் நிறைந்தவனாக இருந்த படியால் இந்துமதி சிந்தையை இவன்மீது செலுத்தினாள். இவனுக்கே மாலையிட்டாள். மழவிடைபோல் மாமன் மனை யுட் புகுந்து மகிழ்ந்திருந்தான். மணத்தை நாடி வந்திருந்த மன்னர்கள் மனம் புழுங்கினார்கள். அனைவரும் ஒன்றுகூடி அசனை எதிர்த்தார்கள். அஞ்சாமையையே தனக்கு அணி கலமாகக் கொண்ட இவன் அஞ்சாது எதிர்த்து அவர்கள் அனைவரையும் ஒருங்கே வென்றான். இவன் அவர்களை வெல்வதற்கு அஞ்சாமையும் மாமன் மனையாகிய தக்க இட மும் நன்கு எண்ணிக் காரியத்தில் புகுந்தமையுமே துணை யாக நின்றன. நன்கு எண்ணிப் பாதுகாப்பான இடத்தில் இருந்து காரியத்தைச் செய்பவனுக்கு அஞ்சாமையல்லாது வேறு துணை வேண்டியது இல்லை என்னும் செய்தி இவ னிடம் நன்கு விளங்கியது.



[அஞ்சாமை]